ஈழம் எங்கும் தமிழன் குருதி சொந்த நாட்டில் அவன் பேர் அகதி
இன்னும் இல்லை நெஞ்சில் அமைதி இவைகள் எல்லாம் உலக மரதி 2

ஆடுகளுக்கோ பட்டி உண்டு குருவிகளுக்கும் கூடு உண்டு 2
நாய்கள் கூட ஒதுங்கி நிற்க நாலு வீட்டு வாசல் உண்டு
வானம்தானே கூரையாச்சு உடமையாவும் சூறை போச்சு
மனித இனமே உங்கள் மனது இறுகிபோன பாறையாச்சு

இன்னும் இல்லை நெஞ்சில் அமைதி இவைகள் எல்லாம் உலக மரதி

ஈழம் எங்கும் தமிழன் குருதி சொந்த நாட்டில் அவன் பேர் அகதி
இன்னும் இல்லை நெஞ்சில் அமைதி இவைகள் எல்லாம் உலக மரதி

ஊயிரை காக்க உணவும் இல்லை பிணியை தீர்க்க மருந்தும் இல்லை 2
மதித்து போற்றும் மனித நேயம் மண்ணின் மைந்தர்கள் காணா எல்லை
இருளின் மடியில் வாழ்கை ஏனோ வெளிச்சம் இன்னும் வேர்கள் தானோ
ஏக்கம் மட்டும் மிச்சம் கொண்டு தரையில் துடித்து வாழும் மீனோ

இன்னும் இல்லை நெஞ்சில் அமைதி இவைகள் எல்லாம் உலக மரதி 2

ஈழம் எங்கும் தமிழன் குருதி சொந்த நாட்டில் அவன் பேர் அகதி
இன்னும் இல்லை நெஞ்சில் அமைதி இவைகள் எல்லாம் உலக மரதி 2